වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

21 T I

තෙවන වාර විභාගය 2024
மூன்றாம் தவணைப்பரீட்சை 2024
Third Term Examination 2024

ආර්ථික විද්‍යාව I
பொருளியல் I
Economics I

ශ්‍රේණිය 12
தரம் 12
Grade 12

පැය දෙකයි
*இரண்டு மணித்தியாலம்*
*Two hours*

# பொருளியல் - I

<u>அறிவுறுத்தல்கள்:</u>

❈ **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

❈ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.

❈ இவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய **அறிவுறுத்தல்களைக்** கவனமாக வாசித்துப் பின்பற்றுக.

❈ இலக்கம் 1 தொடக்கம் 50 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் (1) , (2) , (3), (4) , (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தினை தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப **புள்ளடி (X)** இடுவதன் மூலம் காட்டுக.

01) “அருமை” எனும் எண்ணக்கருவை விளக்குவதற்கு மிகப் பொருத்தமான கூற்றாக அமைவது,
(1) அருமை என்பது சில பொருட்களுக்கு சந்தையில் பற்றாக்குறை காணப்படுவதாகும்.
(3) அருமை என்பது தற்போது காணப்படுகின்ற வளங்களினால் மனித விருப்பங்களை நிறைவு செய்ய முடியாத நிலமையாகும்.
(2) அருமை என்பது குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் எதிர்நோக்கும் பிரச்சினையொன்றாகும்.
(4) சந்தைப் பொறிமுறையில் தங்கியுள்ள நாடுகளில் அருமை தொடர்பிலான பிரச்சினையொன்றைக் காணக்கூடியதாகவுள்ளது.
(5) பொருளாதர வளர்ச்சி காரணமாக அருமைப்பிரச்சினை குறைவடைந்துவிடும்.

02) விவேகமான பொருளியல் கூற்றொன்றாக அமைவது,
(1) தொற்றுநோய் பரவல் காரணமாக பொருளியல் வளர்ச்சியானது முன்னைய வருடங்களுடன் ஒப்பிடும்போது இவ்வருடத்தில் குறைவடைந்துள்ளது.
(2) சாதாரண பண்டமொன்றின் விலை அதிகரிக்கும்போது அதன் கேள்வித்தொகையானது வீழ்ச்சியடையும்.
(3) சந்தையில் பண்டங்களின் விலை அதிகரிப்பானது உற்பத்தியாளர்களுக்கு சாதகமான நிலமையைத் தோற்றுவிக்கும்.
(4) அண்மைக்காலத்தில் இலங்கையின் பணவீக்க வீதமானது தனி இலக்கப்பெறுமதியைக் கொண்டுள்ளது.
(5) வரையறுக்கப்படாத விருப்பங்களுடன் ஒப்பிடும்போது வளங்களின் இருப்பு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

03) பின்வரும் எண்ணக்கருக்களில் சிற்றின பொருளியல் சார்ந்த எண்ணக்கரு யாது?
(1) பணவீக்கம் (2) பொருளாதார பின்னடைவு (3) வெளிநாட்டு நாணய மாற்றுவீதம்
(4) அருமை (5) பண நிரம்பல்

04) எவ்வாறு உற்பத்தி செய்வது? எனும் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினையின் கருத்தாக அமைவது,
(1) கலவை செய்ய வேண்டிய மூலப்பொருட்கள் எவை என்பதை தீர்மானிப்பதாகும்.
(2) ஊழியம், மூலதனம் என்பவற்றின் கலவையின் விகிதத்தை தீர்மானிப்பதாகும்.
(3) உற்பத்தி செய்வது அரசா அல்லது தனியார் துறையா என்பதைத் தீர்மானிப்பதாகும்.
(4) உற்பத்திக்கு ஊழியத்தை மாத்திரம் பயன்படுத்துவதா அல்லது மூலதனத்தை மாத்திரம் பயன்படுத்துவதா என்பதைத் தீர்மானிப்பதாகும்.
(5) மாற்று உற்பத்திகளுக்கு வளங்களை எவ்வாறு பகிர்வது என்பதைத் தீர்மானிப்பதாகும்.



iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers Model Answers - Study Resources

05) பின்வரும் உற்பத்தித் தொகுதிகளில் பயன்பாட்டின் போது அமையச்செலவு பூச்சியப் பெறுமதியினைக் கொண்டுள்ள உற்பத்தி யாது?
(1) பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்ற சீருடைகள்.
(2) ஒரு சோடிக் கண்ணாடி
(3) காடு வளர்ப்பு
(4) கட்டடமொன்று
(5) வாடகை மோட்டார் வாகனமொன்று

06) “நிலம்” எனும் உற்பத்திக் காரணிக்குரிய விசேட பொருளாதாரப் பண்புகளிலொன்று,
(1) இதற்கான உழைப்பு வாடகையாக இருப்பது
(2) உயிருள்ள காரணியொன்றாக இருப்பது.
(3) தேய்விற்கு உட்படல்.
(4) வாடகையைக் கணிக்கக்கூடியதாக இருத்தல்.
(5) வினைத்திறன் கொண்டதாகக் காணப்படல்.

07) பின்வரும் உற்பத்தி சாத்திய வளையியில் உற்பத்தியானது A புள்ளியிலிருந்து B புள்ளிக்கு நகர்வது எதனைக் காட்டுகின்றது?




(1) பொருளாதார வீழ்ச்சி நிலமையினையாகும்.
(2) வேலையற்றோரின் எண்ணிக்கையில் அதிகரிப்பையாகும்.
(3) வேலை வாய்ப்பில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பையாகும்.
(4) வளங்களின் வினைத்திறனற்ற பாவனை குறைவடைந்துள்ளமையாகும்.
(5) உற்பத்தியில் பயனுறுதி அதிகரித்துள்ளமையாகும்.

08) வளங்களின் உரிமை தனியாருக்குச் சொந்தமாகவுள்ளதும், இலாப நோக்கில் செயற்படுகின்ற பொருளாதாரம்,
(1) சந்தைப் பொருளாதாரம்.
(2) திட்டமிடல் பொருளாதாரம்.
(3) முதலாளித்துவப் பொருளாதாரம்.
(4) கலப்புப் பொருளாதாரம்.
(5) கட்டளைப் பொருளாதாரம்.

09) கேள்வியில் தாக்கத்தை ஏற்படுத்தும் பின்வரும் காரணிகளுள் சந்தைக் கேள்வியைத் தீர்மானிக்கின்ற எனினும் நுகர்வோர் கேள்வியைத் தீர்மானிக்காத காரணி பின்வருவனவற்றுள் எதுவாகும்?
(1) கவனத்திற்கொள்ளப்படுகின்ற பண்டத்தின் விலை.
(2) இணைந்த பண்டங்களின் விலை மட்டம்.
(3) நுகர்வோர் எண்ணிக்கை.
(4) நுகர்வோர் சுவை.
(5) நுகர்வோனின் வருமானம்.

10) நுகர்வோரொருவர் பண்டமொன்றைக் கொள்வனவு செய்யத் தயாராகுவராயின், அவரிடம் கொள்வனவு சக்தியுடன் இணைந்த விருப்பம் காணப்படல் வேண்டும். அவ்வாறான கேள்வி,
(1) பொருளாதாரக் கேள்வி என அழைக்கப்படும்.
(2) திறன்மிகு கேள்வி என அழைக்கப்படும்.
(3) விரிந்த கேள்வி என அழைக்கப்படும்.
(4) நுகர்வோர் கேள்வி என அழைக்கப்படும்.
(5) சந்தைக் கேள்வி என அழைக்கப்படும்.

11) குறித்த பண்டமொன்றின் விலையில் மாற்றம் ஏற்பட்டாலும் நுகர்வோரின் கேள்வித்தொகையில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தாத அப் பண்டத்தின் விலை 10 % த்தினால் அதிகரிக்கும் போது,
(1) உற்பத்தி வருமானம் 5 % த்தினால் அதிகரிக்கும்.
(2) உற்பத்தி வருமானம் 10 % த்தினை விடவும் குறைந்தளவில் உயர்வடையும்.
(3) நுகர்வோனின் செலவில் மாற்றமில்லை.
(4) நுகர்வோரின் செலவு 10 % த்தினால் அதிகரிக்கும்.
(5) நுகர்வோரின் செலவு 10 % த்தினால் குறைவடையும்.

12) குறித்த பண்டமொன்றிற்கு சந்தையில் சமநிலை நிலவும்போது ஒரே தடவையில் கேள்வி நிரம்பலில் ஏற்படும் அதிகரிப்பினால் நிச்சயமாக,
(1) சமநிலை விலையில் அதிகரிப்பு ஏற்படும்.
(2) சமநிலை விலை குறைவடைந்து சமநிலைத்தொகையும் குறைவடையும்.
(3) சமநிலை விலை அதிகரித்து சமநிலைத்தொகை குறைவடையும்.
(4) சமநிலை விலை குறைவடைந்து சமநிலைத்தொகை அதிகரிக்கும்.
(5) சமநிலைத்தொகையில் அதிகரிப்பொன்று ஏற்படும்.



iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers · Model Answers · Study Resources

13) கேள்வி விதியினை மிகச்சரியாக விளக்கும் கூற்று யாது?

(1) பண்டத்தின் விலை தவிர்ந்த ஏனைய காரணிகள் நிலையாகக் காணப்படும்போது கேள்விக் கோடானது வலப்பக்கம் நோக்கி நகரும்.

(2) பண்டத்தின் விலை நிலையானதாக இருக்கும்போது ஏனைய காரணிகள் மாறும் போது விலைக்கும் கேள்விக்குமிடையில் எதிர்க்கணியத் தொடர்பு காணப்படும்.

(3) பண்டத்தின் விலை தவிர்ந்த ஏனைய காரணிகள் நிலையானதாக இருக்க விலையில் மாற்றம் ஏற்படுகின்ற போது பதிலீட்டு மற்றும் வருமான விளைவுகள் காரணமாக கேள்வித்தொகையானது நேர்க்கணியமாக மாற்றமடையும்.

(4) பண்டத்தின் விலையும் ஏனைய காரணிகளும் நிலையானதாகக் காணப்படுகின்ற போது கேள்வித்தொகை அதிகரிக்கின்ற போது விலை குறைவடைவதையும் விலை குறைவடைகின்ற போது கேள்வி அதிகரிப்பும் ஏற்படுவதாகும்.

(5) பண்டத்தின் விலை தவிர்ந்த ஏனைய காரணிகள் நிலையானதாக இருக்கும் போது விலையில் மாற்றம் ஏற்படுவதன் காரணமாக போது பதிலீட்டு மற்றும் வருமான விளைவுகளினால் கேள்வித்தொகையில் ஏற்படுகின்ற எதிர்க்கணிய நடத்தையாகும்.

14) ஏதாவது பண்டமொன்றின் நிரம்பல் அதிகரிப்பதற்கு நேர்க்கணியமாக அதன் எல்லைச் செலவும் அதிகரிப்பதுடன், அப்பண்டத்தின் நிரம்பலைத் தொடர்ந்தும் அதிகரிப்பதற்கு உற்பத்தியாளர்கள் எப்போது தூண்டப்படுவர்,

(1) அப்பண்டத்திற்கு விதிக்கப்பட்டுள்ள வரியினை தொடர்ந்தும் அரசு பேணிச் செல்லுமாயிருந்தால் மாத்திரமாகும்.

(2) அதிகரித்து செல்கின்ற எல்லை அமையச் செலவொன்று காணப்படுமாக இருந்தால் மாத்திரமேயாகும்.

(3) பண்டத்திற்கு உத்தரவாத விலையினைப் பெற்றுத் தருவதற்கு அரசு விரும்பினால் மாத்திரமேயாகும்.

(4) அதிகரித்துச் செல்கின்ற எல்லைச் செலவை ஈடு செய்யும் வகையில் பண்டத்தின் விலை அதிகரித்துச் செல்லுமாயிருந்தால் மாத்திரமேயாகும்.

(5) உற்பத்தி தொடர்பில் அரசு வரையறைகளை விதிக்காமலிருந்தால் மாத்திரமேயாகும்.

15) குறித்த நபர் ஒருவர் பண்டமொன்றிற்கான கேள்வியை அவரின் வருமானம் மாற்றமடைகின்ற வீதத்திலும் குறைந்த வீதத்தில் நேர்கணியமாக மாற்றுவாராயின், அப்பண்டமானது,

(1) தரத்தில் கூடிய பண்டமொன்றாகும். (2) கிபன் பண்டமொன்றாகும்.

(3) அத்தியாவசியப் பண்டமொன்றாகும். (4) ஆடம்பரப் பண்டமொன்றாகும்.

(5) இழிவுப் பண்டமொன்றாகும்.

16) x பண்டத்தின் விலை ரூபா 80 இலிருந்து ரூபா 90 வரை அதிகரித்த போது y பண்டத்தின் கேள்வித்தொகையானது 1000 இலிருந்து 750 வரை குறைவடைந்ததாயின், x மற்றும் y பண்டங்களுக்கிடையிலான குறுக்குக் கேள்வி நெகிழ்ச்சி எவ்வளவு?

(1) 0.2 (2) - 2.0 (3) 2.5 (4) - 2.5 (5) - 2.6

17) பின்வரும் கேள்விக் கோட்டில் விலை ரூபா 25 இன் போது கேள்வி நெகிழ்ச்சி எவ்வளவு?




(1) - 0.5 ஆகும். (2) 0.5 ஆகும். (3) - 1.0 ஆகும்.

(4) 1.0 ஆகும். (5) - 2.0 ஆகும்.

18) குறித்த பண்டமொன்றிற்கான கேள்வியானது நெகிழ்ச்சியற்றதாகக் காணப்படுகின்றது. இந்நிலமையில் வருமானத்தின் நடத்தை தொடர்பிலான சரியான கூற்று யாது?

(1) விலை அதிகரிக்கும் போது அதிகரிக்கும். (2) விலை குறைவடையும் போது எவ்வித மாற்றமும் ஏற்படாது.

(3) விலை அதிகரித்தாலும் மாற்றமின்றிக் காணப்படும்.

(4) விலை அதிகரிக்கும் போது குறைவடையும்.

(5) விலை எந்த பக்கம் சென்றாலும் நிலையானதாகக் காணப்படும்.



iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers Model Answers - Study Resources

19) சந்தையில் காணப்படுகின்ற குறித்த பிஸ்கட் வகையொன்றிற்கான கேள்வியானது சார்பு ரீதியில் விலை நெகிழ்ச்சியினைக் கொண்டுள்ளது எனக் கருதவும். இப்பண்டத்தின் நிரம்பலில் அதிகரிப்பு ஏற்படுமாயின் ஏற்படும் விளைவு யாது?

(1) மொத்த வருமானத்தையும் குறைவடையச் செய்து விலையும் குறைவடையும்.
(2) சந்தையில் பிஸ்கட்டுக்கு மிகை நிரம்பலொன்று உருவாகும்.
(3) சந்தையில் பிஸ்கட்டுக்கு மிகைக் கேள்வியொன்று உருவாகும்.
(4) ஒப்பீட்டு ரீதியில் விலையில் சிறிய அதிகரிப்பொன்று ஏற்படும் எனினும் சமநிலைத்தொகையில் மாற்றமேற்படாது.
(5) மொத்த வருமானத்தை உயர்வடையச் செய்து பண்டத்தின் விலை குறைவடையும்.

20) இக்கேள்விக் கோட்டிற்கு பொருத்தமாக அமையக்கூடிய கேள்விச் சமன்பாடு யாது?




(1) Qd = a - bp (2) Qd = a + bp (3) Qd = - a + bp (4) Qd = a (5) Qd = - a - bp

21) பண்டம் x யிற்கு நெகிழ்ச்சியுடனான கேள்விக் காணப்படுகின்றது. அது ஆடம்பரப் பண்டமாகும். **x** பண்டம், **y** பண்டத்தின் இணைப்புப் பண்டமாகவும் காணப்படின், **x** பண்டம் தொடர்பிலான சரியான கூற்று யாது?

| | விலைசார் கேள்வி நெகிழ்ச்சி | வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சி | குறுக்குக் கேள்வி நெகிழ்ச்சி |
|---|---|---|---|
| (1) | - 1.5 | 2.0 | மறை |
| (2) | - 0.8 | 0.8 | மறை |
| (3) | - 1.0 | 2.8 | நேர் |
| (4) | - 0.5 | 0.3 | நேர் |
| (5) | - 1.5 | - 2.0 | மறை |

22) பொதி செய்யப்பட்ட பால் பொதிகளுக்கான சந்தையில் சமநிலை நிலவுகின்றது எனக் கருதவும். பொதி செய்யப்பட்ட பால் பொதிகளுக்கு கேள்வி கூடுதலாகக் காணப்படுகின்ற நிலமையில் பொதி செய்யப்பட்ட பாலுக்கு இச்சந்தையில் காணக்கூடிய நிலமைகளில் ஒன்று,

(1) விலை, தொகை ஆகிய இரண்டும் எந்தவித மாற்றமுமின்றிக் காணப்படும்.
(2) விலை அதிகரிப்பதுடன், விற்பனைத்தொகை குறைவடையும்.
(3) விலை, தொகை ஆகிய இரண்டும் குறைவடையும்.
(4) தொகை அதிகரிக்கும்போது விலை மாற்றம் நிச்சயமற்றது.
(5) பொருளாதார மிகை அதிகரிக்கும்.

23) சமநிலை விலையை விடக் குறைந்த விலை நிர்ணயம் செய்யப்படுகின்ற உச்ச விலைக்கொள்கையின் பெறுபேறாக சந்தையில்,

(1) மிகை நிரம்பலொன்று உருவாகும்.
(2) மிகைக் கேள்வியொன்று உருவாகும்.
(3) புதிய சமநிலை விலையொன்று ஏற்படும்.
(4) நிரம்பல் அதிகரிக்கும்.
(5) கேள்வி குறைவடையும்.



iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers Model Answers - Study Resources

24) சீனிக்கு உள்நாட்டுச் சந்தையில் காணப்படுகின்ற கேள்வி, நிரம்பல் கோடுகளுக்குரிய சமன்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன.

$Qd = 320 - 3p$ $Qs = - 80 + 2p$

இச்சந்தையில் நிரம்பலின் அடிப்படையில் சீனிக்கு ரூபா 20 அலகு வரியொன்று விதிக்கப்படுமாயின், சீனிக்குரிய சந்தையில் வரிக்கு முன்னர் மற்றும் வரிக்குப் பின்னரான சமநிலை விலைகளை முறையாகக் காட்டும் விடை யாது?

(1) ரூபா 88, ரூபா 80 (2) ரூபா 104, ரூபா 88 (3) ரூபா 80, ரூபா 88
(4) சமநிலை விலைகளில் மாற்றமில்லை. (5) ரூபா 75, ரூபா 88

25) குறித்த பண்டமொன்றிற்கான கேள்வி மற்றும் நிரம்பல் கோடுகளின் சமன்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன.

$Qd = 60 - 2p$ $Qs = - 10 + 3p$

இப்பண்டத்தின் ஒவ்வொரு அலகுக்கும் ரூபா 5 மானியம் வழங்கப்படுமாயின், மானியத்தின் பின்னர் உற்பத்தியாளருக்குக் கிடைக்கின்ற விலை (Ps) மற்றும் கொள்வனவாளர் (நுகர்வோர்) செலுத்துகின்ற விலை (Pb) என்பவற்றை முறையாகக் காட்டும் விடை யாது?

| | **உற்பத்தியாளருக்குக் கிடைக்கும் விலை (Ps)** | **நுகர்வோர் செலுத்தும் விலை (Pb)** |
|---|---|---|
| (1) | 14 | 09 |
| (2) | 12 | 17 |
| (3) | 15 | 20 |
| (4) | 14 | 19 |
| (5) | 16 | 11 |

26) உருளைக்கிழங்குக்கு உள்நாட்டுச் சந்தையில் காணப்படுகின்ற கேள்வி, நிரம்பல் நிலமைகளைப் பின்வரும் சமன்பாடுகள் காட்டுகின்றன.

$Qd = 400 - 4p$ $Qs = - 100 + 6p$

உருளைக்கிழங்கு அலகொன்றிற்கு உலகச்சந்தை விலை ரூபா 40 ஆகக் காணப்படுகின்றது. இந்த உருளைக்கிழங்குச் சந்தையானது சர்வதேசத்திற்கு திறந்து விடப்படுகின்ற நிலைமையில் உருளைக்கிழங்கிற்கான உள்நாட்டு கேள்வி நிரம்பல் தொகைகள் முறையே பின்வருவனவற்றுள் யாது?

(1) அலகுகள் 240 , 240 (2) அலகுகள் 200 , 200 (3) அலகுகள் 240 , 140
(4) அலகுகள் 140 , 100 (5) அலகுகள் 100 , 140

27) குறித்த பண்டமொன்றிற்கான கேள்வி, நிரம்பல் கோடுகள் கீழே வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளன. இப்பண்டத்திற்கு உற்பத்தி மானியத்தை வழங்குவதற்கு அரசு தீர்மானிக்குமாயின், அலகுக்கான மானியமானது,




(1) உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்குமிடையில் சமமான அளவில் பகிர்வு செய்யப்படும்.
(2) உற்பத்தியாளருக்குக் கூடுதலான அளவிலும், நுகர்வோருக்குக் குறைந்த அளவிலும் பகிர்வு செய்யப்படும்.
(3) மானியத்தில் முழுவதும், உற்பத்தியாளருக்குப் பகிர்ந்தளிக்கப்படும்.
(4) மானியத்தில் முழுவதும், நுகர்வோருக்குக் கிடைக்கப்பெறும்.
(5) மானியத்தில் கூடுதலான அளவு நுகர்வோருக்கே உரித்தாகும்.



www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers Model Answers - Study Resources

28) அரசின் கொள்வனவுடன் கூடிய விலை ஆதரவுக் கொள்கை நடைமுறைப்படுத்தப்படுகின்ற பண்டமொன்றிற்கான தகவல்களைக் கீழேயுள்ள வரைபடம் காட்டுகின்றது. மிகை நிரம்பலை அரசு கொள்வனவு செய்வதற்கு ஏற்படுகின்ற செலவு யாது?




(1) ரூபா 1 000 ஆகும். (2) ரூபா 1 200 ஆகும். (3) ரூபா 1 500 ஆகும்.
(4) ரூபா 250 ஆகும். (5) ரூபா 3 000 ஆகும்.

29) குறித்த உற்பத்தி நிறுவனமொன்றிடமுள்ள உற்பத்தி உள்ளீடுகள் பின்வருமாறு. அவற்றுள் குறுங்காலத்தில் நிலையானதாகக் காணப்படுகின்ற காரணியாகக் குறிப்பிடக்கூடியது,
(1) பயன்படுத்திய மின்சார அலகுகளின் எண்ணிக்கை. (2) நிறுவனம் அமைந்துள்ள இடம்.
(3) உழைப்பு (ஊழிய) மணித்தியாலங்கள். (4) பயன்படுத்திய மூலப்பொருட்களின் அளவு.
(5) அலுவலகப் பாவனைக்காகவுள்ள எழுதுகருவிகளின் பெறுமதி.

30) உற்பத்தித் தொகைக்கேற்ப மாற்றமடையாத உற்பத்தி மட்டத்துடன் எந்தவிதத் தொடர்புமற்ற உற்பத்தி பூச்சியமாக இருந்தாலும் நிறுவனம் ஏற்றுக்கொள்ள வேண்டிய செலவு,
(1) மொத்த மாறும் செலவாகும். (2) மொத்த நிலையான செலவாகும்.
(3) நீண்ட கால உற்பத்திச் செலவாகும். (4) எல்லைச் செலவாகும்.
(5) சராசரி மொத்தச் செலவாகும்.

31) நிறைபோட்டிச் சந்தை, தனியுரிமைப் போட்டிச் சந்தை போன்ற இரண்டு அமைப்புக்களுக்கும் பொதுவான எடுகோள்களைக் காட்டும் சரியான விடைத்தொகுதி யாது?

| நிறைபோட்டிச் சந்தை | தனியுரிமைப் போட்டிச் சந்தை |
|---|---|
| (1) வேறுபட்ட உற்பத்திகள் மேற்கொள்ளப்படல். | 1) ஒத்த வகைப் பண்டங்கள் உற்பத்தி செய்யப்படும். |
| (2) விற்பனையாளர்கள் கூடுதலாகக் காணப்படுவர். | 2) விற்பனையாளர்கள் சிறிய அளவில் காணப்படுவர்.. |
| (3) உட்பிரவேசித்தல், வெளியேறலுக்கு தடைகள் காணப்படும். | 3) உட்பிரவேசிக்கவும் வெளியேறவும் தடைகள் காணப்படும். |
| (4) தகவல்களைப் பெற்றுக்கொள்வது கடினம். | 4) பூரணமான தகவல்கள் வழங்கப்படும். |
| (5) ஓரினத்தன்மையைக் கொண்ட பொருட்கள் உற்பத்தி செய்யப்படல். | 5) வேறுபட்ட பொருட்கள் உற்பத்தி செய்யப்படும். |

32) குறையும் எல்லை விளைவு விதி என்பது,
(1) உற்பத்தி நிறுவனமொன்று நிலையான உள்ளீட்டு அளவுகளுடன் மாறும் உள்ளீடுகளை அதிகரித்து உற்பத்தியைக் கூட்டும்போது குறித்த சந்தர்ப்பத்தின் பின்னர் அதன் எல்லைப் பயனானது படிப்படியாகக் குறைந்து செல்கின்றது என்பதாகும்.
(2) உற்பத்தி நிறுவனமொன்று அதன் மாறும் உள்ளீட்டு அளவுகளுடன் நிலையான உள்ளீடுகளை அதிகரித்து உற்பத்தியைக் கூட்டும்போது குறித்த சந்தர்ப்பமொன்றின் பின்னர் எல்லைப் பயனானது படிப்படியாகக் குறைந்து செல்லும் என்பதாகும்.
(3) தொழிற்சாலையின் பருமனைக் கூட்டும்போது அதன் எல்லைப் பயனானது படிப்படியாகக் குறைவடையும் என்பதாகும்.
(4) தொழிற்சாலையின் பருமனைக் கூட்டும்போது அதன் எல்லைச் செலவு மற்றும் சராசரிச் செலவு என்பன படிப்படியாகக் குறைவடையும் என்பதாகும்.
(5) உற்பத்தி நிறுவனம் நிலையான உள்ளீட்டு அலகுகளுடன் மாறும் உள்ளீடுகளை அதிகரித்து உற்பத்தியைக் கூட்டும்போது குறித்த சந்தர்ப்பமொன்றின் பின்னர் அதன் சராசரிச் செலவானது குறைவடைகின்றது என்பதாகும்.



www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers · Model Answers · Study Resources

33) குறித்த நிறுவனமொன்றின் வெளியீடானது பூச்சியமாக இருக்கும் போது அதன் மொத்தச் செலவானது ரூபா 500 ஆகக் காணப்படுகின்றது. 5 அலகுகளை உற்பத்தி செய்யும் மொத்தச் செலவு ரூபா 740 ஆயின், 5 அலகுகளை உற்பத்தி செய்யும் சராசரி மாறும் செலவு எவ்வளவு?

(1) ரூபா 248 (2) ரூபா 240 (3) ரூபா 160 (4) ரூபா 100 (5) ரூபா 48

34) இலாபத்தை உச்சப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட நிறைபோட்டி நிறுவனமொன்று குறுங்கால நட்டத்தைக் குறைத்துக் கொள்வதற்காக பின்வரும் எந்நிலமையின் போது உற்பத்தி நிறுவனத்தை மூடுவதற்குத் தீர்மானிக்கும்?

(1) சராசரி வருமானம், சராசரி மொத்தச் செலவை விடக் குறைவடையும் போதாகும்.
(2) எல்லைச் செலவானது எல்லை வருமானத்தை விட குறைவடையும் போதாகும்.
(3) சராசரி வருமானம் சராசரி மாறும் செலவை விடக் குறைவடையும் போதாகும்.
(4) மொத்த வருமானம் மொத்தச் செலவை விடக் குறைவடையும் போதாகும்.
(5) எல்லைச் செலவானது சராசரி மாறும் செலவை விட அதிகரிக்கும் போதாகும்.

35) பின்வரும் தொழில்களில் கூடுதலானளவு தனியுரிமைப் போட்டிற்குரிய பண்புகளைக் கொண்டுள்ள தொழில் யாது?

(1) தொலைக்காட்சி ஒளிபரப்பு (2) அழகுக்கலை நிறுவனங்கள். (3) டயர் உற்பத்தி
(4) செய்தித்தாள்கள் (5) சீமேந்து உற்பத்தி

36) சிலருரிமைச் சந்தையில் கட்டாயமாக இருக்க வேண்டிய பண்பு,

(1) பாரியளவிலான உற்பத்தியாளர்கள் ஒரு சிலர் மாத்திரம் காணப்படல்.
(2) நிறுவனங்களுக்கிடையே விலையின் அடிப்படையிலான ஒப்பந்தமொன்று காணப்படமாட்டாது.
(3) சிறப்பு வாய்ந்த உற்பத்திகள் மேற்கொள்ளப்படல்.
(4) நிறுவன மற்றும் சந்தை நடத்தைகள் ஒத்த தன்மை கொண்டதாகக் காணப்படுவதுடன் சிறப்பு வாய்ந்த பண்டங்கள் உற்பத்தி செய்யப்படும்.
(5) சந்தையில் தொடர்ச்சியாக உள்வர, வெளியேறத் தடைகள் இல்லை.

37)




குறித்த பொருளாதாரமொன்றின் குறுகிய காலத்தில் புள்ளி A யிலிருந்து புள்ளி B வரை பயணிக்கின்ற பின்னடைவுக் கட்டத்தின் போது இடம்பெறக்கூடிய இரு விளைவுகளாவன,

(1) கேள்வி குறைவடைதலும், வேலையின்மை குறைவடைதலுமாகும்.
(2) உற்பத்திகள் (வெளியீடுகள்) குறைவடைதலும், வேலை வாய்ப்புக்கள் குறைவடைதலுமாகும்.
(3) வணிகத்தின் நம்பகத்தன்மை விருத்தியடைதலும், முதலீடுகள் அதிகரித்தலும்.
(4) வேலையின்மை குறைவடைதலும், வெளியீடுகள் அதிகரித்தலுமாகும்.
(5) உள்நாட்டு வருமானம் அதிகரித்தலும், சிற்றின வணிகங்களின் விருத்தியும்.

38) பின்வரும் எச்செயற்பாடானது உற்பத்தி எல்லையிலிருந்து வெளியே திகழ்கின்றது?

(1) சம்பளம் பெறும் ஊழியர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற வீட்டு வேலைகள்.
(2) தாம் வசிக்கும் வீடுகளிலிருந்து கிடைக்கின்ற விடுதி வசதிகள்.
(3) தனது வீட்டுத்தோட்டத்தில் காய்கறிகளைப் பயிரிடல்.
(4) தனது வீட்டைச் சுத்தம் செய்தலும், அலங்காரப்படுத்தலும்.
(5) காடுகளில் உணவு வகைகளையும் பழங்களையும் சேகரித்தல்.



www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers Model Answers - Study Resources

39) குறித்த வருடமொன்றில் நாடொன்றின் பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூபா 1 000 பில்லியன்களாகவும், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் உற்பத்திச் சுருக்கி 125 எனவும் கருதவும். இந்நாட்டின் மெய் உள்நாட்டு உற்பத்தியின் பெறுமதி யாது?

(1) ரூபா 80 பில்லியன் (2) ரூபா 800 பில்லியன் (3) ரூபா 1000 பில்லியன்
(4) ரூபா 1050 பில்லியன் (5) ரூபா 1200 பில்லியன்

40) பின்வருவனவற்றுள் முதனிலை வருமானத்தின் கூறுகளில் உள்ளடங்காதது,

(1) மொத்த கலப்பு வருமானம். (2) உற்பத்தி மற்றும் இறக்குமதியின் அடிப்படையிலான தேறிய வரி
(3) ஊழியர் வருமானம் (4) தேறிய வெளிநாட்டு முதனிலை வருமானம்.
(5) மொத்த தொழிற்பாட்டு மிகை.

41) 2022 ஆம் ஆண்டின் இலங்கையின் வியாபார விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் தனி நபர் மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பவற்றைச் சரியாகக் காட்டும் கலவை யாது?

| | வியாபார விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி (US டொலர் பில்லியனில்) | தனிநபர் மொத்த உள்நாட்டு வருமானம் (US டொலர் ) |
|---|---|---|
| (1) | 94.4 | 4290 |
| (2) | 92.4 | 3968 |
| (3) | 86.5 | 3867 |
| (4) | 76.2 | 3378 |
| (5) | 72.1 | 3260 |

42) மொத்த உள்நாட்டுச் செலவுடன் சென்மதி நிலுவை அட்டவணையின் நடைமுறைக் கணக்கின் நிலுவையினைச் சீராக்கும் போது கிடைப்பது,

(1) மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அடிப்படையிலான செலவாகும்.
(2) மொத்த உள்நாட்டு வருமானமாகும். (3) தேறிய உள்நாட்டு உற்பத்தியாகும்.
(4) செலவிடத்தக்க மொத்த உள்நாட்டு வருமானமாகும். (5) உள்நாட்டு சேமிப்பின் பெறுமதியாகும்.

43) செலவு அணுகுமுறையின் அடிப்படையில் நாடொன்றின் மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் கணிப்பிடும்போது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் நிலையான மூலதனமீட்டலின் கூறொன்றாகக் கணிப்பிடப்படுவது பின்வருவனவற்றுள் எதுவாகும்?

(1) தனிப்பட்ட பாவனைக்காக கொள்வனவு செய்த புதிய மோட்டார் வாகனம்.
(2) கம்பனியொன்றின் பங்குகள்.
(3) தேக்க மரங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ள காணி.
(4) நாட்டிலுள்ள சகல “அஸ்வெசும” உதவி பெறுபவர்களுக்கு செலுத்துகின்ற ரூபா 5 000 கொடுப்பனவு.
(5) வணிகரொருவர் தனியார் வங்கியொன்றில் பெற்றுக் கொள்ளும் கடன் தொகை.

44) கருதுகோள் பொருளாதாரமொன்றிற்குரிய பின்வரும் தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- பண்டங்கள் மற்றும் காரணியல்லாத சேவைகளின் ஏற்றுமதி = ரூபா 400 பில்லியன்
- பண்டங்கள் மற்றும் காரணியல்லாத சேவைகளின் இறக்குமதி = ரூபா 600 பில்லியன்
- உள்நாட்டு சேமிப்பு = ரூபா 500 பில்லியன்
- வெளிநாட்டு தேறிய முதனிலை வருமானம் = ரூபா 200 பில்லியன்
- வெளிநாட்டு தேறிய நடைமுறை மாற்றல்கள் = ரூபா 300 பில்லியன்

மேலே தரப்பட்ட தகவல்களுக்கேற்ப இப்பொருளாதாரத்தின் மொத்த உள்நாட்டு மூலதனமீட்டல்கள் மற்றும் தேசிய சேமிப்பு என்பவற்றின் பெறுமதிகளை முறையாகக் காட்டும் விடை யாது?

(1) ரூபா 1000 பில்லியன், ரூபா 1500 பில்லியன் (2) ரூபா 800 பில்லியன், ரூபா 1200 பில்லியன்
(3) ரூபா 700 பில்லியன், ரூபா 1000 பில்லியன் (4) ரூபா 650 பில்லியன், ரூபா 1000 பில்லியன்
(5) ரூபா 500 பில்லியன், ரூபா 800 பில்லியன்



iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers · Model Answers · Study Resources

45) தன்னிச்சையான நுகர்வு ரூபா 600 மில்லியன்களாகவும், எல்லை நுகர்வு நாட்டம் (MPC) 0.8 ஆகவுள்ள குறித்த பொருளாதாரமொன்றின் மொத்த நுகர்வுத் தொழிற்பாடு (சார்பு) பின்வரும் வரைபடத்தின் மூலம் காட்டப்படுகின்றது?




செலவிடத்தக்க மொத்த உள்நாட்டு வருமானம் ரூபா 2 000 மில்லியனிலிருந்து 3 000 மில்லியன்கள் வரை அதிகரிக்குமாயின், எல்லை நுகர்வு நாட்டத்திலும் (MPC) மற்றும் சராசரி நுகர்வு நாட்டத்திலும் எவ்வாறான மாற்றங்கள் இடம்பெறும்?

| | MPC | APC |
|---|---|---|
| (1) | உயர்வடையும். | உயர்வடையும். |
| (2) | உயர்வடையும். | குறைவடையும். |
| (3) | மாற்றமின்றிக் காணப்படும். | உயர்வடையும். |
| (4) | குறைவடையும். | உயர்வடையும். |
| (5) | மாற்றமின்றிக் காணப்படும். | குறைவடையும். |

46) குறித்த பொருளாதாரமொன்றின் பேரினப் பொருளாதார மாறிகளின் நடத்தையினைக் கீழுள்ள வரைபடம் காட்டுகின்றது.




இப்பொருளாதாரத்தின் மொத்த செலவுத் தொழிற்பாடு $AE_1$ இலிருந்து $AE_2$ வரை மேல்நோக்கி நகர்வதற்கு பின்வருவனவற்றுள் எது காரணமாக இருக்கலாம்?

(1) வர்த்தக நிலுவையின் பற்றாக்குறை
(2) எல்லை நுகர்வு நாட்டத்தின் அதிகரிப்பு
(3) தேறிய வரியின் அதிகரிப்பு.
(4) வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை.
(5) வீட்டுத்துறையின் சேமிப்பில் அதிகரிப்பு.

47) எல்லை நுகர்வு நாட்டம் (MPS) 0.25 ஆகவும், தன்னிச்சையான நுகர்வு (a) ரூபா 400 ஆகவும் காணப்படுகின்ற எளிய பொருளாதாரமொன்றில் செலவிடத்தக்க வருமானம் (yd) ரூபா 1 200 வால் அதிகரிக்குமாயின், நுகர்வுச் செலவு (c) எவ்வளவினால் அதிகரிக்கும்?

(1) ரூபா 1 100 வினாலாகும். (2) ரூபா 1000 த்தினாலாகும்.
(3) ரூபா 900 வினாலாகும். (4) ரூபா 700 வினாலாகும்.
(5) ரூபா 300 வினாலாகும்.


iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers Model Answers - Study Resources

48) குறித்த பொருளாதாரமொன்றின் பேரினப் பொருளாதாரத் தரவுகளின் அட்டவணையொன்று கீழே தரப்பட்டுள்ளன.

| **உருப்படிகள்** | **ரூபா மில்லியன்** |
|---|---|
| சேமிப்பு | 300 |
| முதலீடு | 260 |
| வரி அறவீடு | 800 |
| தேறிய ஏற்றுமதி | - 110 |
| அரசின் கொள்வனவுகள் | 950 |

மேலே தரப்பட்ட தகவல்களுக்கேற்ப இப்பொருளாதாரம் தொடர்பிலான பின்வரும் கூற்றுக்களுள் சரியான கூற்று யாது?
(1) வரவு செலவுத்திட்ட மிகையொன்று காணப்படுகின்றது.
(2) பொருளாதாரம் சமநிலையில் காணப்படுகின்றது.
(3) வெளிப்பாய்ச்சல், உட்பாய்ச்சலை விடக் குறைவாகக் காணப்படும்.
(4) வெளிப்பாய்ச்சல், உட்பாய்ச்சலை விட அதிகமாகக் காணப்படும்.
(5) பொருளாதாரம் சுருக்கத்தன்மையைப் பெறும்.

49) சுருக்கியின் பெறுமதியை விரிவடையச் செய்வதற்கான காரணி பின்வருவனவற்றுள் எதுவாகும்?
(1) எல்லைச் சேமிப்பு நாட்டம் அதிகரித்தல். (2) எல்லை நுகர்வு நாட்டம் அதிகரித்தல்.
(3) அரசின் செலவுகள் குறைவடைதல். (4) நுகர்வுக்கான செலவுகள் குறைவடைதல்.
(5) ஏற்றுமதியின் அளவு குறைவடைதல்.

50) எல்லை நுகர்வு நாட்டம் (MPC) 0.9 ஆகக் காணப்படுகின்ற பொருளாதாரமொன்றில் அரசின் வரியினை ரூபா 100 மில்லியனாகவும், அரச செலவுகளை ரூபா 180 மில்லியனாகவும் அதிகரித்தால் இப்பொருளாதாரத்தில் மொத்த வெளியீடுகள் எவ்வளவு தொகையினால் மாற்றமடையும்?
(1) ரூபா 2 700 மில்லியனால் விரிவடையும். (2) ரூபா 1 800 மில்லியனால் விரிவடையும்.
(3) ரூபா 900 மில்லியனால் விரிவடையும். (4) ரூபா 900 மில்லியனால் சுருங்கும்.
(5) ரூபா 100 மில்லியனால் சுருங்கும்.


iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers · Model Answers · Study Resources

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
**வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்**
**Provincial Education Department (NWP)**

**21 | T | II**

| | | |
|---|---|---|
| තෙවන වාර විභාගය 2024<br>மூன்றாம் தவணைப்பரீட்சை 2024<br>**Third Term Examination 2024** | ආර්ථික විද්‍යාව II<br>பொருளியல் II<br>**Economics II** | ශ්‍රේණිය 12<br>தரம் 12<br>**Grade 12** |
| *පැය තුනයි*<br>*மூன்று மணித்தியாலம்*<br>***Three hours*** | | අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි<br>மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்<br>Additional Reading Time - 10 minutes |

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**பொருளியல் - II**

**<u>அறிவுறுத்தல்கள்:</u>**

✵ உப பிரிவுகள் **"அ"** , **"ஆ"** ஆகிய ஒவ்வொன்றிலும் இருந்து குறைந்த பட்சம் **இரண்டு** வினாக்களையேனும் தெரிவு செய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

✵ **வரைபுத்தாள்கள்** வழங்கப்படும்.

**உப பிரிவு அ**

**(01)** 1) "இலவசப் பண்டம் என்பது பொருளாதாரப் பண்டமாகும்" இக்கூற்று உண்மையானதா? விளக்குக. (4 புள்ளிகள்)

2) காரணிகளின் விளைத்திறன் என்பதை விளக்கி, அதனைத் தீர்மானிக்கும் பிரதான காரணிகள் இரண்டைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

3) கணினி மற்றும் தொலைக்காட்சிகளை உற்பத்தி செய்யும் பொருளாதாரமொன்றைக் கருதுகோளாக எடுக்கவும். கணினியொன்று இரண்டு தொலைக்காட்சிகளுக்கு சமம் எனக் கருதவும்.

அ) உங்களது புள்ளி விபரங்களைப் பயன்படுத்தி உற்பத்தி சாத்திய அட்டவணையொன்றைக் கட்டியெழுப்பவும் அதற்குரிய உற்பத்தி இயலளவை வரைபடத்தில் காட்டுக. (3 புள்ளிகள்)

ஆ) மேலே வரையப்பட்ட உற்பத்தி இயலளவு வளையியின் விசேட வடிவத்திற்கான காரணிகளைத் தருக. (2 புள்ளிகள்)

4) பொருளாதார அமைப்புக்களை வகைப்படுத்தும் நியதிகளைத் தருக. (3 புள்ளிகள்)

5) "கலப்புப் பொருளாதார முறைமையொன்று நாடொன்றுக்கு கூடுதலான அனுகூலங்களைப் பெற்றுக் கொடுக்கிறது" விளக்குக. (4 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

**(02)** 1) சாதாரணப் பண்டமொன்றிற்கு கேள்வி விதியானது எவ்வாறு செயற்படுகிறது என்பதை விளக்குக. (4 புள்ளிகள்)

2) சாதாரணப் பண்டம், இழிவுப் பண்டம், கிபன் பண்டம் என்பன ஒன்றோடொன்று வேறுபடுகின்ற முறைகளை விளக்குக. (4 புள்ளிகள்)

3) குறித்த பண்டமொன்றிற்கு காணப்படுகின்ற சந்தைக் கேள்வி மற்றும் நிரம்பல் கோடுகளுக்குரிய சமன்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன.

$Qd = 120 - 20p$ (கேள்வி) $QS = -30 + 10p$ (நிரம்பல்)

அ) இப்பண்டத்தின் சமநிலை விலை மற்றும் தொகையினைக் கணிப்பிட்டு, அதனை வரைபடத்தில் காட்டுக. (4 புள்ளிகள்)

ஆ) சமநிலையின்போது நுகர்வோர் மிகை, உற்பத்தியாளர் மிகை என்பவற்றைக் கணிக்க. (4 புள்ளிகள்)

4) ஏனைய காரணிகள் நிலையாகக் காணப்படுகின்ற போது பண்டமொன்றின் விலை அதன் நிரம்பல் தொகைக்கு நேர் (+) சார்பாகக் காணப்படுவதற்கான காரணம் யாது? விளக்குக. (4 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**



www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers · Model Answers · Study Resources
iexamhub

**(03)** 1) கேள்வி விதிக்கு முரணான சந்தர்ப்பங்கள் மூன்று தருக. (3 புள்ளிகள்)

2) பாணுக்கான விலைக் கேள்வி நெகிழ்ச்சி -0.5 என பரிசோதனையின் போது தெரிய வந்துள்ளது. தற்போது ஒரு இறாத்தல் பாணின் விலை ரூபா 120 ஆகும். பாணின் நுகர்வினை 20% த்தினால் குறைப்பதற்கு அரசு எதிர்பார்க்கின்றது. இதற்கு பாணின் விலையானது எவ்வளவாக இருத்தல் வேண்டும்?(4 புள்ளிகள்)

3) விலையல்லாத பங்கீட்டு முறைகள் மூன்றைக் குறிப்பிடுவதுடன், அவற்றைச் சுருக்கமாக விளக்குக. (6 புள்ளிகள்)

4) குறித்த பண்டமொன்றின் விலை குறைவடையும்போது நுகர்வோன் அப்பண்டத்திற்கு கூடுதலான கேள்வியை ஏற்படுத்துவதற்கான காரணங்களை விளக்குக. (4 புள்ளிகள்)

5) சந்தைச் சமநிலையில் காணக்கூடிய பண்புகளைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

**(04)** 1) அலகு மானியம் என்பதன் கருத்து யாது? (2 புள்ளிகள்)

2) போட்டிச் சந்தையொன்றில் விற்பனை செய்யப்படுகின்ற பொருளொன்று தொடர்பிலான பின்வரும் சமன்பாட்டின் உதவியுடன் கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்க.

Qd = 500 - 50p (கேள்விச் சமன்பாடு ) QS = 100 + 50p (நிரம்பல் சமன்பாடு)

அ) சமநிலை விலை மற்றும் தொகையினை வரைபடம் ஒன்றினூடாகக் காட்டுக. (2 புள்ளிகள்)

ஆ) இப்பண்டத்திற்கு அரசு ரூபாய் 2 மானியம் வழங்குமாயின், புதிய சமநிலை விலை மற்றும் சமநிலைத்தொகை யாது? மேலே வரைபடத்தில் காட்டுக. (2 புள்ளிகள்)

இ) அரசுக்கு ஏற்படுகின்ற மானியச் செலவு எவ்வளவு? (2 புள்ளிகள்)

ஈ) மானியம் காரணமாக இழக்கப்படுகின்ற சமூக நலன்புரி (Dead weight social Loss) எவ்வளவு? (4 புள்ளிகள்)

3) சந்தையில் அரசு தலையீடு செய்து அலகு வரியினை விதிக்கின்றது எனக் கருதவும் அலகு வரி விதிக்கப்பட்ட பின்னர் பின்வரும் நிலைமைகளில் எவ்வகையான கேள்வி நெகிழ்ச்சி உருவாகும் என்பதை வரைபடத்தைப் பயன்படுத்தி விடையினை விளக்குக.

அ) வரிப் பொறுப்பில் கூடுதலான அளவு நுகர்வோருக்கு சுமத்தப்படல். (2 புள்ளிகள்)

ஆ) வரிப் பொறுப்பில் கூடுதலான அளவு உற்பத்தியாளருக்கு சுமத்தப்படல். (2 புள்ளிகள்)

4) பண்டமொன்றிற்கு உற்பத்தி வரியொன்று விதிக்கப்பட்ட போது நிரம்பல் கோட்டில் எவ்வித மாற்றமும் ஏற்படாதிருப்பின், வரி விதிக்கப்பட்ட பின்னர் உற்பத்தி மிகையில் ஏற்படுகின்ற தாக்கத்தை வரைபடமொன்றினூடாக விளக்குக. (4 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

**(05)** 1) உருளைக்கிழங்கு உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு அரசானது கிலோ ஒன்றுக்கு ரூபாய் 100 விலை மானியம் ஒன்றை வழங்குவதுடன், மிகை நிரம்பலை மானிய விலையின் அடிப்படையில் அரசு கொள்வனவும் செய்கின்றது எனக் கருதவும். சந்தைக் கேள்வி, நிரம்பல் சமன்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன.

Qd = 240 - 2p QS = -210 + 3p

அ) இவ் விலை மானிய வேலைத்திட்டத்தின் காரணமாக சந்தையில் நுகர்வோர் கேள்வித்தொகை மற்றும் உற்பத்தியாளன் நிரம்பல் தொகை என்பவற்றைக் கண்டுபிடிக்கவும். (2 புள்ளிகள்)

ஆ) அரசின் கொள்வனவுக்கு முன்னர் கட்டுப்பாட்டு விலை காரணமாக உருவாகின்ற சந்தை மிகை நிரம்பல் தொகையைக் கண்டுபிடிக்கவும். (1 புள்ளிகள்)

இ) விலை மானிய வேலைத்திட்டத்தின் கீழ் அரசின் செலவைக் கணிக்கவும். (1 புள்ளிகள்)

ஈ) விலை மானியம் காரணமாக இழக்கப்படுகின்ற சமூக நல இழப்பினை வரைபடத்தினூடாகக் கணிப்பிடவும். (4 புள்ளிகள்)

2) கோழி இறைச்சிக்கான உச்ச விலையினை அரசு நிர்ணயித்துள்ளது. கோழி இறைச்சிக்கு உச்ச விலையை நிர்ணயித்தமையின் பொருளாதர விளைவுகள் யாவை? (4 புள்ளிகள்)

3) முதனிலைப் பண்டங்களின் விலையினை உறுதியாகப் பேணுவதற்கும் விவசாயிகளின் வருமானத்தை ஸ்திரப்படுத்துவதற்கும் அரசு பயன்படுத்துகின்ற உபாயங்கள் யாவை? (4 புள்ளிகள்)

4) உச்ச விலையினை நிர்ணயித்து அதனை வெற்றிகரமாக்கிக் கொள்வதற்கு அரசு மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் யாவை? (4 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**



iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers Model Answers - Study Resources

**(06)** 1) "குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவு" மற்றும் "மாறும் காரணிகளின் குறையும் அளவுத்திட்ட விளைவு" என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகளை விளக்குக. (4 புள்ளிகள்)

2) நிறைப்போட்டி மற்றும் தனியுரிமைப் போட்டி போன்ற சந்தைகளுக்கிடையில் காணப்படுகின்ற இரண்டு ஒற்றுமைகளையும் இரண்டு வேறுபாடுகளையும் விளக்குக. (4 புள்ளிகள்)

3) உற்பத்தி நிறுவனமொன்றின் சராசரி மொத்தச் செலவு, சராசரி மாறும் செலவு என்பவற்றில் பின்வரும் நிகழ்வுகள் எவ்வாறு தாக்கத்தையேற்படுத்தும் என்பதைக் குறிப்பிடுக.

அ) எரிபொருட்களின் விலை குறைவடைதல்.

ஆ) ஊழியர்களின் சம்பள வீதம் உயர்வடைதல்.

இ) நிறுவனம் பெற்ற கடனுக்கான வட்டியானது 3% இனால் அதிகரிக்கப்படல்.

ஈ) நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியின் சம்பளத்தில் ஏற்படுகின்ற அதிகரிப்பு. (4 புள்ளிகள்)

4) மாதாந்த வருமானமாக ரூபா 100 000 ஐ உழைத்துக் கொண்டிருந்த ஊழியரொருவர் தனக்கே உரிமையான வணிகமொன்றாக விலங்கு உணவுகள் விற்பனை செய்யும் விற்பனையகமொன்றை ஆரம்பிக்கின்றார். இதனூடாக மாதாந்தம் ரூபா 250 000 வருமானத்தை உழைத்துக் கொண்டு வணிகத்தை வெற்றிகரமாக நடாத்திச் செல்கின்றார்.

அ) மாற்றல் வருமானம் மற்றும் பொருளாதார வரி வாடகை என்பவற்றிற்கான வரைவிலக்கணங்களைத் தந்து, இந்த எண்ணக்கருக்கள் இரண்டுக்குமிடையிலான வேறுபாடுகளைப் பொருத்தமான வரைபடமொன்றினூடாக விளக்குக. (4 புள்ளிகள்)

ஆ) இம்முயற்சியாளரின் மாற்றல் வருமானம் எவ்வளவு? (2 புள்ளிகள்)

இ) இம்முயற்சியாளர் பொருளாதார வரி வாடகையை உழைக்கிறாரா? மேலே தரப்பட்டுள்ள தகவல்களின் உதவியுடன் உங்களது விடையினை விளக்குக. (2 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

**(07)** 1) உற்பத்தி நிறுவனமொன்றின் இலாபத்தினைப் பிரதானமாகக் கணக்கீட்டு அணுகுமுறை மற்றும் பொருளாதார அணுகுமுறை போன்ற இரு முறைகளினூடாக கணிப்பிட முடியும். இதற்கேற்ப "கணக்கியல் இலாபம்" "பொருளாதார இலாபம்" என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகளை விளக்குக. (4 புள்ளிகள்)

2) சிலருரிமைச் சந்தையும் தனியுரிமைச் சந்தையும் அவற்றின் அமைப்பினூடாக எவ்வாறு வேறுபடுகின்றது என்பதைச் சுருக்கமாக விளக்குக. (4 புள்ளிகள்)

3) உற்பத்தி நிறுவனமொன்றின் நீண்ட கால உற்பத்திச்செயற்பாடுகளின் பெறுபேறாக பொருளாதாரச் சிக்கனம் மற்றும் பொருளாதார சிக்கனமின்மையும் ஏற்படலாம். இவ்வாறு ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை? (6 புள்ளிகள்)

4) நிறைபோட்டிச் சந்தையொன்றினுள் நட்டமடைந்து வருகின்ற எனினும் எதிர்காலத்தில் விலை அதிகரிப்பின் காரணமாக இலாபம் உழைக்கலாம் என்ற எதிர்பார்ப்பில் நிறுவனத்தை மூடாமல் தொடர்ந்தும் அந்த உற்பத்தியை அதே மட்டத்திலேயே பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ள உற்பத்தி நிறுவனமொன்றின் சராசரி மொத்தச் செலவு, சராசரி மாறும் செலவு, எல்லைச் செலவு போன்ற கோடுகளின் நடத்தைகளை வரைபடத்தின் மூலம் விளக்குக. (6 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

**(08)** 1) தேசிய கணக்கீட்டில் வருமான அணுகுமுறையின் கூறுகளாகிய மொத்த தொழிற்பாட்டு மிகை மற்றும் கலப்பு வருமானம் என்பவற்றைச் சுருக்கமாக விளக்குக. (2 புள்ளிகள்)

2) "பொருளாதாரப் பிரதேசம்" என்பதனால் கருதப்படுவது யாது? (3 புள்ளிகள்)

3) உற்பத்திச் செயன்முறையின் போது மொத்த உள்நாட்டு உற்பத்திக்காக பயன்படுத்தப்படுகின்ற "வேறுபட்ட விலையிலான அடிப்படை விலை, உற்பத்தியாளர் விலை'' என்பவற்றை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படுகின்ற முறைகளை வெவ்வேறாகத் தருக. (4 புள்ளிகள்)

4) குறித்த பொருளாதாரமொன்றின் தேசிய கணக்கீடு தொடர்பிலான பின்வரும் தரவுகள் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.



iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers · Model Answers · Study Resources

| உருப்படிகள் | பெறுமதி (ரூபா பில்லியனில்) |
|---|---|
| தனிப்பட்ட நுகர்வுச் செலவுகள் | 15 000 |
| அரசு நுகர்வுச் செலவுகள் | 12 000 |
| முதலீடுகள் | 10 000 |
| ஏற்றுமதிகள் | 5 000 |
| இறக்குமதிகள் | 3 500 |
| வெளிநாட்டு தேறிய முதல் நிலை வருமானங்கள் | - 1 000 |
| வெளிநாட்டு தேறிய இரண்டாம் நிலை வருமானங்கள் | 1 500 |
| நிலையான மூலதன நுகர்வு | 800 |

மேலே தரப்பட்ட தரவுகளின் உதவியுடன் பின்வருவனவற்றைக் கணிக்க.

அ) மொத்த உள்நாட்டுச் செலவுகள் (2 புள்ளிகள்)

ஆ) மொத்த உள்நாட்டு உற்பத்தி (2 புள்ளிகள்)

இ) தேறிய உள்நாட்டு வருமானம். (2 புள்ளிகள்)

5) குறித்த பொருளாதாரமொன்றின் தன்னிச்சையான நுகர்வு ரூபா 500 மில்லியனாகவும், எல்லை சேமிப்பு நாட்டம் 0.25 எனவும் கருதவும்.

அ) இப்பொருளாதாரத்தின் நுகர்வு சார்பைக் (தொழிற்பாட்டைக்) கட்டியெழுப்பவும். (2 புள்ளிகள்)

ஆ) இப்பொருளாதாரத்தில் முதலீடுகள் ரூபா 100 மில்லியன், அரச செலவுகள் ரூபா 180 மில்லியனாயின், சமநிலை தேசிய வருமானத்தைக் கணிக்கவும். (3 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

**(09)** 1) பின்வரும் பிரிவினர் தேசிய கணக்கீட்டின் போது வீட்டுத்துறையினராகவா? அல்லது வீட்டுத்துறையைச் சேராதவர்களாகவா? கருதப்படுகின்றார்கள் என்பதைக் குறிப்பிடவும்.

அ) மத்திய கிழக்கு நாடொன்றில் வீட்டு வேலை செய்யும் இலங்கையரொருவர்.

ஆ) ஐக்கிய அமெரிக்காவில் பல்கலைக்கழகமொன்றில் 4 வருடங்களாகக் கற்கும் இலங்கை மாணவரொருவர்.

இ) இலங்கையிலுள்ள வைத்தியசாலையொன்றில் 6 வருடங்களாக தொழில் புரிந்து கொண்டிருக்கும் இந்திய வைத்தியரொருவர்.

ஈ) இலங்கையிலுள்ள ரஷ்ய தூதகரத்தில் வேலை செய்யும் இலங்கையரொருவர். (4 புள்ளிகள்)

2) ஏதாவது சந்தர்ப்பமொன்றில் குறித்த நாடொன்றின் மொத்த உள்நாட்டு வருமானமானது அந்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை விடவும் கூடுதலான பெறுமதியைக் காட்டுவதற்கான காரணங்கள் யாவை? (2 புள்ளிகள்)

3) கருதுகோள் பொருளாதாரமொன்றிற்கான தரவுகள் சில கீழே தரப்பட்டுள்ளன. (சகல பெறுமதிகளும் ரூபா பில்லியனில்)

| | |
|---|---|
| ஊழியர் வருமானம் | 3 000 |
| மொத்த தொழிற்பாட்டு மிகை | 5 000 |
| நிலையான மூலதன நுகர்வு | 1 000 |
| உற்பத்தியின் அடிப்படையிலான ஏனைய வரிகள் (தேறியது) | 100 |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | 15 000 |
| வெளிநாட்டு தேறிய முதனிலை வருமானம் | - 200 |
| வெளிநாட்டு தேறிய இரண்டாம் நிலை வருமானம் | 500 |
| கலப்பு வருமானம் | 6 000 |

மேலே தரப்பட்ட தரவுகளின் அடிப்படையில் பின்வருவனவற்றைக் கணிக்க.

அ) அடிப்படை விலையில் மொத்த கூட்டிய பெறுமதி. (2 புள்ளிகள்)

ஆ) உற்பத்தியின் அடிப்படையிலான தேறிய வரி. (2 புள்ளிகள்)

இ) மொத்த உள்நாட்டு (தேசிய) வருமானம். (2 புள்ளிகள்)

ஈ) செலவிடத்தக்க தேறிய உள்நாட்டு வருமானம். (2 புள்ளிகள்)

iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers · Model Answers · Study Resources

4) திறந்த பொருளாதாரமொன்றின் பேரினப் பொருளியல் சமநிலையினை வருமானம் செலவு அணுகுமுறை மற்றும் உட்பாய்ச்சல்கள், வெளிப்பாய்ச்சல்கள் அணுகுமுறைகளுக்குரிய வரைபடங்களைப் பயன்படுத்திக் காட்டுக. (4 புள்ளிகள்)

**பக்கம் 4**

5) எல்லை நுகர்வு நாட்டம் 0.75 ஆகவுள்ள பொருளாதாரமொன்றின் தன்னிச்சையான வரியினை ரூபா 50 மில்லியினால் அதிகரித்தால் சமநிலை உள்நாட்டு (தேசிய) வருமானத்தில் அது எவ்வாறு தாக்கம் செலுத்தும்? (2 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

**(10)** 1) மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் கணிப்பிடும்போது உருவாகின்ற பிரதான பிரச்சினை "பல்கணிப்பீட்டுப் பிரச்சினையாகும்" பல்கணிப்பீட்டுப் பிரச்சினை என்றால் என்ன? இவ்வழுவினை திருத்துவதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் யாவை? (4 புள்ளிகள்)

2) குறித்த பொருளாதாரமொன்றின் குறித்த காலப்பகுதியினுள் மொத்த உற்பத்திச் செயற்பாட்டினை, உற்பத்தி, வருமானத்திலும் செலவு போன்ற அணுகுமுறைகளினூடாக அளவிடும் போது ஒரே பெறுமானமே வழங்கப்படுகிறது. இதற்கான காரணம் யாது? (3 புள்ளிகள்)

3) உற்பத்தி எல்லையில் உள்ளடங்காத பொருளாதாரக் கருமங்கள் மூன்றைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

4) தன்னிச்சையான நுகர்வுச் செலவு, வீட்டுத்துறை நுகர்வுச் செலவு ஆகிய இரண்டையும் வேறுபடுத்தி விளக்குக. (4 புள்ளிகள்)

5) எளிய பொருளாதாரமொன்றின் மொத்த நுகர்வுத் தொழிற்பாடு $C = 250 + 0.75y$ எனவும், முதலீடு ரூபா 450 மில்லியன் எனவும் கருதவும்,

அ) இப்பொருளாதாரத்தின் சேமிப்பு தொழிற்பாட்டை எழுதிக்காட்டுக. (1 புள்ளிகள்)

ஆ) சமநிலை வருமானத்தில் நுகர்வுச் செலவு எவ்வளவு? (1 புள்ளிகள்)

6) வழங்கப்பட்ட காலப்பகுதியினுள் குறித்த மூடப்பட்ட பொருளாதாரமொன்றில் நிறைதொழில் வருமான மட்டம் ரூபா 1000 மில்லியன் எனக் கருதவும். காணப்படுகின்ற சமநிலை வெளியீடு ரூபா 800 மில்லியனாகும். தன்னிச்சையான நுகர்வின் மொத்தப் பெறுமதி ரூபா 200 மில்லியன் ஆகும்.

அ) வேலையற்றோர்கள் நிலமையின் கீழ் செயற்படுகின்ற இப்பொருளாதாரத்தின் சமநிலை உள்நாட்டு வருமானத்தை வருமானம், செலவு வரைபடமொன்றின்னூடாகக் காட்டுக. (2 புள்ளிகள்)

ஆ) வேலையின்மை இடைவெளியை அதில் காட்டுக. (2 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**



iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers Model Answers - Study Resources